**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No. 44/2020**
**Sessions :**
**Deposition of Witness for :PW3 , LW2**

| | |
|---|---|
| Name | :வசந்தி |
| Husband Name | :குப்புராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 3rd day of September** 2022.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது எண்.29, லாலா கஜபதி லேன் ஐஸ் ஹவுஸ் சென்னை குடியிருந்து வருகிறேன். அ.சா1 சாந்தா எனது அக்கா ஆவார். அ.சா.2 கருணாகரன் எனது அக்கா மகன் ஆவார். பட்டியல் சாட்சி 4 செல்வம் எனது அண்ணன் ஆவார். பட்டியல் சாட்சி 5 குப்புராஜ் எனது கணவர் ஆவார். பட்டியல் சாட்சி 6 சந்திரசேகர் எனது அக்கா கணவர் ஆவார். எனது அப்பா முத்துசாமி முதலியார் செங்கல்பட்டில் பஸ் ஓனராக இருந்தார். அவர் 2010 ஆம் வருடம் இறந்து விட்டார்.

2. அவருக்கு நான் மற்றும் எனது அக்கா சாந்தா, உமாராணி, சகோதரர்கள் செல்வம், அண்ணன் சிவப்பிரகாசம் ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் ஆகும். எனது அப்பா வெங்கடசாமி ரெட்டியாரிடம் இருந்து 1960 ஆம் வருடம் நிலம் கிரையம் வாங்கியிருந்தார். எனது அப்பா மேற்சொன்ன கிரைய பத்திரத்தை அடமானம் வைத்து ரூ.25000 பெற்றிருந்தார். அவர் இறந்த பின்பு அந்த கிரைய பத்திரத்தை விற்பதற்காக சென்று பார்த்தபோது அந்த பத்திரத்தை ஏற்கனவே வாங்கி சென்று விட்டதாக வங்கியில் சொன்னாகள். அந்த பத்திரத்தை யார் வாங்கி சென்றாகள் என்று என் அக்கா மற்றும் அக்கா மகன் என்னிடம்

சொன்னார்கள். அந்த பத்திரத்தை தீனதயாளன் என்பவர் வாங்கி சென்றதகாக சொன்னார்கள். தீனதயாளன் என்பவருக்கு எனது தகப்பனார் பத்திரத்தை வங்கியில் இருந்து வாங்கி செல்லும் படி கடிதம் ஒன்று என் அப்பா கையொப்பம் போட்டு கொடுத்தாக சொன்னார்கள்.

3. அந்த கடிதத்தை என்னிடம் காண்பித்தார்கள். அதில் உள்ள கையொப்பம் எனது தகப்பனாருடையது அல்ல. என் தகப்பனார் அவ்வாறு கையொப்பம் செய்ய மாட்டார். மற்ற விவரங்கள் எனது அக்காவுக்கும் அக்கா மகனான கருணாகரனுக்கும் தெரியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

4. போலிசார் என்னை சம்மன் அல்லது அறிவிப்பு எதுவும் கொடுத்து விசாரணைக்கு அழைத்தார்களா என்றால் அதை பற்றி எனக்கு நினைவு இல்லை. போலிசார் என்னை 2 முறை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது எனது அப்பா கையெழுத்து உள்ள வேறு ஆவணங்களை காண்பித்து இவ்வாறு தான் எனது அப்பா கையொப்பம் செய்வாரா என்று விசாரணை செய்தார்களா என்றால் நியாபம் இல்லை.

5. அ.சா.1 மற்றும் அ.சா2 ஆகியோர்கள் தான் எனது அப்பாவின் போலிக் கையெழுத்து உள்ள ஆவணமான அசா.ஆ.10 யை என்னிடம் காண்பித்தார்கள். அ.சா.1 மற்றும் அ.சா2 உடன் நான் வங்கிக்கு செல்லவில்லை. அவர்கள் தான் ஆவணத்தை எடுத்து வந்து என்னிடம் காண்பித்தார்கள். இந்த சொத்து சம்பந்தமாக செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் விவரங்கள் அனைத்தும் அ.சா.1 மற்றும் அ.சா2 சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

6. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட சொத்தினை எதிரி தீனதயாளன் வேறு யாருக்கும் விற்கவில்லை என்ற விவரம் தெரியுமா என்றால் அந்த நிலத்தை எனது அப்பாவுக்கு வெங்கடசாமி ரெட்டியார் விற்றார். அதை எனது தந்தை முத்துசாமி முதலியார் வாங்கினார். இது நடந்தது 1960 ம் வருடம் என்றால் சரிதான். 1960 வருடத்தில் இருந்து இன்றைய தேதி வரை வழக்கு சம்பந்தப்பட்ட சொத்து எனது அப்பா பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்து வெங்கடசாமி

ரெட்டியாருக்கு சொந்தம் என்றாலும் எனது அப்பா பெயரில் வெங்கடசாமி ரெட்டியாரால் நில உச்ச வரம்பு காலகட்டத்தில் கிரையம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. எனது அப்பா இந்த சொத்தை ரொக்கம் எதுவும் கொடுத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. பணம் கொடுத்துதான் வாங்கினார் அதற்கு ஆவணங்கள் இருக்கிறது.

7. எதிரி தீனதயாளன் எனது அப்பாவின் கையொப்பத்தை போல் அவரே கையொப்பம் செய்து வங்கியில் ஆவணத்தை வாங்கினார் என்று சொல்வது தவறு என்றாலும், அவ்வாறு வங்கியில் ஆவணங்களை பொதுவாக கொடுக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தை எனது அப்பாவும், எனது சகோதரர் செல்வமும் சேர்ந்து தான் வங்கியில் அடமானம் வைத்தார்கள் என்ற விவரம் தெரயுமா என்றால் தெரியாது. அசா.1 மற்றும் அ.சா2 ஆகியோர் எதிரி கையொப்பம் செய்து எந்தெந்த ஆவணங்கள் மற்றும் எத்தனை ஆவணங்களை வங்கியில் இருந்து பெற்றுச்சென்னறதாக என்னிடம் சொன்னார்கள எனறால் வழக்கு சொத்து சம்பந்தமான ஆவணங்களை பெற்று சென்றதாக சொன்னார்கள். ஆனால் குறிப்பிட்டு எந்த ஆவணங்கள் மற்றும் எத்தனை ஆவணங்கள என்று சொல்லவில்லை.

**மறு விசாரணை**

இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No. 44/2020**
**Sessions :**
**Deposition of Witness for :PW4 , LW5**

| | |
|---|---|
| Name | :குப்புராஜ் |
| Father's/Husband Name | : சி.எண், பாலசுப்பிரமணி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 3rd day of September** 2022.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது எண்.29, லாலா கஜபதி லேன் ஐஸ் ஹவுஸ் சென்னையில் குடியிருந்து வருகிறேன். இந்துஸ்தான் நிறுவனத்தில் அலுவலராக பணி செய்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். அசா.1 சாந்தா என் மனைவியின் அக்கா ஆவார். அ.சா.2 கருணாகரன் சாந்தாவின் மகன் ஆவார். அசா.3 வசந்தி எனது மனைவி ஆவார். பட்டியல் சாட்சி 4 செல்வம் எனது மைத்துனர் ஆவார். பட்டியல் சாட்சி 6 சந்திரசேகர் எனது சகலை ஆவார்.

2. எனது மாமனார் முத்துசாமி முதலியார் செங்கல்பட்டு தனியார் பேருந்து முதலாளியாக பணியாற்றினார். அவர். 2010 ஆம் வருடம் செப்டம்பர் மாதத்தில் இறந்து விட்டார். அவருக்கு சிவப்பிரகாசம், செல்வம், சாந்தா, உமா, வசந்தி ஆகியோர்கள வாரிசுதாரர்கள் ஆவார். எனது மாமனார் செய்யூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் விவசாய நிலங்கள் வாங்கி இருந்தார். அதன் விவரம் என்னிடம் சொல்லியுள்ளார். அவர் இறந்த பிறகு அவர் நிலத்தை பேங்கில் அடமானம் வைத்து பணம் வாங்கிய விவரம் சாந்தா மற்றும் அவர் மகன் கருணாகரன் மூலம் தெரியவந்தது.

3. மேற்சொன்ன அடமானத்தை மீட்பதற்காக வங்கிக்கு சாந்தாவும் கருணாகரனும் சென்றார்கள். அப்போது வங்கியில் அந்த அடமான பத்திரத்தை 2004 ம் வருடம் வாங்கி விட்டு சென்றதாக சொன்னார்கள். மேற்சொன்ன அடமான பத்திரதை தீனதயாளன் என்பவர் திரும்ப வாங்கி சென்றதாக சொன்னார்கள். தீனதயாளன் என்பவர் எனது மாமானார் போல் கையொப்பம் செய்து போலியாக பெற்றதாக சொன்னார்கள். அந்த கையொப்பம் எனது மாமனார் கையொப்பம் இல்லை என்று சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

4. இந்த வழக்கின் விவரம் எனது மனைவியின் அக்கா சாந்தா சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். வழக்கு ஆவணத்தின் உள்ள கையெழுத்து எனது மாமனாருடையது அல்ல என்று சாட்சி சாந்தா சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2017 ம் வருடம் ஆவணங்களை சரிபார்த்த பின்பு தான் மேற்சொன்ன விவரங்கள் எங்களுக்கு தெரியவந்தத என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

**இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No. 44 /2020**
**Sessions :**
**Deposition of Witness for :PW5 , LW6**

| | |
|---|---|
| Name | :சந்திரசேகர் |
| Father's/Husband Name | :வேதாச்சலம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 3rd day of September** 2022.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது சென்னை, பெரம்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் சிம்சன் நிறுவனத்தில் வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளேன். அ.சா.1 சாந்தா எனது மனைவி ஆவார். அசா.2 கருணாகரன் எனது மகன் ஆவார். அசா.3 வசந்திர மற்றும் அ.சா4 குப்புராஜ் மற்றும் பட்டியல் சாட்சி.4 செல்வம் எனது உறவினர் ஆவார். எனது மாமனார் முத்து சாமி முதலியார் செங்கல்பட்டு தனியார் பேருந்து முதலாளியாக பணியாற்றினார். அவர் 1960 ம் வருடம் வெங்கடாசமி ரெட்டியாரிடம் இருந்து விழுதமங்களம் கிராமத்தில் விவசாய நிலத்தை கிரையம் பெற்றார். அந்த ஆவண எண். 1041/1960 ஆகும்.

2. அந்த பத்திரத்தை 1986ம் வருடம் மதுராந்தகம் ஒழுலூர் வங்கியில் அடமானம் வைத்து சவுக்கு சாகுபடிக்காக ரூ. 25000 கடனாக பெற்றார். மேற்சொன்ன கடனை அவரே சிறுக சிறுக கட்டி அடைத்துக்கொண்டே வந்தார். அவர் 10/09/2010 ம் தேதி இறந்து விட்டார். அவரது வாரிசுகள் 1. சாந்தா, 2. உமாராணி, 3. செல்வம், 4. வசந்தி, மற்றும் சிவப்பிரகாசம் ஆவார்கள். அவர் இறந்த பின்பு எனது மனைவி சாந்தா மற்றும் எனது மகன் கருணாகரன் அந்த வங்கியில் சென்று

கடனை பைசல் செய்து ஆவணத்தை பெறுவதற்காக சென்றார்கள். அவர்கள் வங்கியில் சென்று கேட்டபோது ஒரு கடிதத்தை காண்பித்து தீனதயாளன் என்பவர் அந்த ஆவணங்களை வாங்கி சென்று விட்டதாக சொன்னார்கள்.

3. அந்த கடிதத்தில் முத்துசாமி முதலியார் எழுதியதும் கிடையாது அவர் கையொப்பமும் கிடையாது. அந்த கடிதம் போலியானது ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**4.** நான் வங்கிக்கு எனது மனைவி மற்றும் மகனுடன் சென்றேனா என்றால் இல்லை. வங்கியில் அந்த ஆவணத்தில் எனது மாமனாரின் போலிக்கையொப்பம் இடம்பெற்றிருந்த விவரத்தை எனது மனைவியும் மகனும் சொல்லித்தெரியும். வங்கிக்கு எனது மகனும், மனைவியும் சென்ற போது தான் எப்போது அடமானம் முடிக்கப்பட்டது என்ற விவரத்தை தெரிந்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

**5.** அந்த அடமானத்தை எப்போது **discharge** செய்யப்பட்டது என்ற தேதி என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனது மனைவி எப்போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் புகார் கொடுக்கும் போது நான் அவருடன் சென்றிருந்தேன் ஆனால் தேதி, நேரம் சரியாக நினைவில் இல்லை. போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தபோது முத்துசாமி முதலியாரின் போலிக்கையெழுத்தை தவிற அவரது கையொப்பம் உள்ள வேறு ஆவணங்களை காண்பித்து விசாரித்தார்களா என்றால் அவர் கையொப்பம் உள்ள வேறு ஆவணங்களை காண்பித்தார்கள் அது என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது.

**6.** எதிரி தீனதயாளனுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் அவர் எனது மாமனார் போல் போலிக்கையொப்பம்

**செய்து எந்த ஆவணமும் வங்கியில் இருந்து வாங்கி சென்றதில்லை என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை**

**இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.